பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(28.05.2025 முதல் 01.06.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.comதொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 042 (05) PJN/GKMS/2025 தேதி: 27.05.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (22.05.2025 முதல் 26.05.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -01.06.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22/05 | 23/05 | 24/05 | 25/05 | 26/05 | | நாள்-1 28/05 | நாள்-2 29/05 | நாள்-3 30/05 | நாள்-4 31/05 | நாள்-5 01/06 |
| 0 | 0 | 10 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 3 | 0 | 8 | 6 |
| 38 | 38 | 37 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 32 | 32 | 31 | 31 | 31 |
| 26 | 28 | 25 | 25 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 26 | 26 | 25 | 25 | 25 |
| 2 | 1 | 5 | 4 | 5 | மேக மூட்டம் | 3 | 5 | 6 | 8 | 8 |
| 59-85 | 57-88 | 65-92 | 70-90 | 65-83 | ஈரப்பதம் (%) | 70-80 | 70-80 | 60-80 | 70-70 | 70-80 |
| 4 | 4 | 5 | 3 | 5 | காற்றின் வேகம் (கி.மீ) | 22 | 24 | 24 | 26 | 24 |
| வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | வடக்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (28.05.2025 முதல் 01.06.2025 வரை):**

மே 29, 31 மற்றும் ஜூன் 01 ஆகிய தேதிகளில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 25-32 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 22-26 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஜூன் 01 லிருந்து 07 வரை மழை (1.5 மி.மீ) மற்றும் அதிகபட்ச வெப்பநிலை (32.5 டி.செ) இயல்பை விட குறைவாகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.7 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பொது ஆலோசனை | கோடை உழவு | மழை அளவை பொருத்து கோடை மழையைப் பயன்படுத்தி உழவு செய்து களைகள், பூச்சிகள் மற்றும் நோய்க் கிருமிகளை கட்டுப்படுத்தலாம். |
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | மேகமூட்டமான வானிலையுடன் மழையும் சேர்ந்து பருத்தியில் பூ உதிர்வதை அதிகரிக்கும். எனவே மழை இல்லாத நாட்களில், பருத்தியில் பூ உதிர்தலை தடுக்க 40 பி.பி.எம் என்.ஏ.ஏ கலவையை (அதாவது லிட்டருக்கு 0.8 மில்லி லிட்டர் நாப்தலீன் அசிடிக் அசிட் என்ற அளவில் ) விதைத்த 60 மற்றும் 90 வது நாட்களில் தெளிக்கவும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம். |
| | | பருத்தியில் சாறு உருஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சுகளினால் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டால் சாறு உருஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஹெக்டருக்கு இமிடாக்லோபிரைட் 17.8 SL 100 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% (300 ppm) 2500 மிலி தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரி பயிரில் காய் பூச்சிகளை கட்டுப்படுத்த லிட்டருக்கு எமாமெக்டின் பென்சோயேட் 4% SG 0.4 கிராம் என்ற அளவில் தெளிக்கவும். |
| பாகல் மற்றும் புடலை | காய்க்கும் பருவம் | பாகல் பெண்பூக்களின் எண்ணிக்கைகளை அதிகரிக்க எத்ரல் கரைசலை 100 பிபிஎம் (ஒரு மில்லி 10 லிட்டர் தண்ணீரில்), விதைத்த 15 வது நாளிலிருந்து வாராந்திர இடைவெளியில் நான்கு முறை தெளிக்கவும். |
| தென்னை | காய்க்கும் பருவம் | தென்னை மரத்தில் வேர் மூலம் தென்னை டானிக் (200 மில்லி/ மரத்திற்கு) 3 மாத இடைவெளியில் கொடுத்து குரும்பை உதிர்வதை தடுக்கலாம். |

**குறுஞ்செய்தி:** அடுத்த சில நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**